813

வேங்கடேச சதகம்.

ஸீதாலக்ஷிமி அம்மாள்
இயற்றியது

132

ஸ்ரீவாணீ விலாஸ் பிரஸ்
ஸ்ரீரங்கம்.
1931.

Q22:417
N4
128205

உ

ஸ்ரீ வேங்கடேசாயநம:

வேங்கடேச சதகம்.

கணபதி துதி.

ராகம்—அடாணா—தாளம்—ரூபகம்.

"முருகன் திருமால் மருகன் பெருமை" என்ற மெட்டு.

பல்லவி.

வருவாய்மதிசேகரன் பாலகனே—எந்தன்
வாக்கிலமர்ந்து ஹரியைத்துதித்திட (வரு)

அனுபல்லவி.

திருமாமலையோனைப்புகழ்ந்திட
தடையின்றியுன் அருள்செய்திட
அறிவின் முனைதனில் நின்றிட (வரு)

சரணங்கள்.

1. ஆதியிலுன் துணைகொண்டுவரைந்ததோர்
வேதத்தின்முதல்நீயே—உமை
பாலின்மடியிலமர்ந்து சிறுவடிவானவனும்நீயே
[illegible]தியுடன்உன்னைப் போற்றுமவர்—வரன்

எது மெனிதிலடைக்குமகிழ்ந்திட
நீதும் தலையும் துலைத்திடுமுன்னுட
துணையின் ஒரு பெருமைதனில்
ஹரியின் துதி உரைசெய்திட (வரு

2. அந்தம்மிகுந்தவடிவினிலேயொரு
ஆனைமுகத்தோனே—பலன்
தந்திடும்மோதச்செங்காமும்
பெருந்தொந்தி வயிற்றோனே
பந்தமறுத்திடும் பாசமுடன்—சிவ
பூதகணங்கள் பணிந்திடும் பாதமும்
கந்தன் அயன்லமாற்கண்டு மகிழ்ந்திடும்
கருணாநிதி யுனையண்டிய
எனதன்னையின் துயர்வென்றிட (வரு

விருத்தம்.

மலைதன்னிலேவாசமே கமர்ந்தாயிந்த
மாதுவாராதவழியோ
முகமூடியே பொடியணிந்திடினும் உன்னை யான்
அரியேனெனக் கருதியோ
தரித்தொரு தண்டமதைக்கண்டு
யான் அண்டையினிலனுகேனெனும் உறுதியோ
தந்தை எனவே யுரவுகூருவேனென்றிடையில்
தரித்ததொரு காவியுடையோ
அசைத்துனது செவிதன்னில் முறை
கூருவேனென்றடைந்த தவயோக நிலையோ
ஆண்டி எனவே மனையில் பூஜியோமென்று
பரமாநந்தமானவடிவோ

தரித்துடலிலுருத்திராக்கமே தமிலை என்னிடம்
அளித்திடவுமென்ற உரையோ
தொலைதூரம் நின்றுனை யழைத்திடவும் ஏனென்று
கேளாதமோன நிலையோ
ஷண்முகனென்றுனையான் அறியேனெனக்கருதி
ஒருமுகமெடுத்த உருவோ
ஸ்திரீகளுக்குபதேச மிதுவென்றுமே சற்று
நயனந்திறந்த குருவோ
சக்திமகனென்றுவசன் கேளாதிருந்திடவும்
தள்ளாதவ்ருத்த வடிவோ
பக்தருள்ளத்துமறு கோணமதிலும்
ஸ்வாமிமலையிலுமேவும் முருகேசனே.

ஸுப்பிரமணியர் துதி.

ஹரி காம்போதி—ஆதி.

"என்ன சொல்லுவேன் ஐயன் ரூபம்" என்றமெட்டு

பல்லவி.

மான்மகள் வள்ளிமுருகேசன்—மயில்
ஆடும்கடன விஸ்வாஸன் (மா

அநுபல்லவி

அன்புடன் பணிந்தோர்க்கு தாஸன்—ஆரும்
இல்லாதவர்க்கு வெகுநேசன் (மா

சரணங்கள்.

1. சங்கரன் பெற்றெடுத்த முருகா—செங்கண்
[illegible]ளாயவதரித்தோன் மருகா (மா

2. தேவர்குறைதவிர்த்த பாலா—தெய்வ
யானை மகிழுமறுதோளா (மா

3. சூரனை வதைத்த கெம்பீரா—திரு
மாரில் கடம்பணிந்த ஹாரா (மா

4. தந்தைக்குயர்ந்தகுரு சீலா—தஞ்சை
மானகர் மேவும் வடிவேலா (மா

5. அன்னை வினை தவிர்க்க வாரும்—ஹரி
தன்னை துதிக்குமருள் தாரும். (மா

ஸரஸ்வதி துதி.

ஆநந்த பைரவி—ஆதி

“காஞ்சியில் வாழ்ந்திருக்கும்” என்றமெட்டு.

பல்லவி.

தாயேகலைவாணி அயன் ராணி அம்மணி (தா

அனுபல்லவி.

வெண்டாமரையின்மேலே விளங்கும் ஜகன்மூலே
திருமாலின் துதிகூறும் மதிதாரும் அன்னையே (தா

சரணம்.

வேதமறைநாலும் ஒலிக்கும் திருயாழும்
இலங்கும் மணிமாலையுடன் வாரும் அம்மணி (

காம்போதி—கண்டசாபு

"நடமாடி திரிந்த உமக்கு இடதுகால்" என்றமெட்டு

பல்லவி.

அடியாற்கு மெய்ப்பொருளென்னய்யனே பூமிதனில்
தெளிவாகும் தவ உருவே (அடி

அனுபல்லவி.

அறிவிலாதென்னையுமுன் கரையிலாஞானமெனும்
கடைவிழியினால் ஹரியை நினைத்திடவும் செய்தவரே

சரணங்கள்.

1. திருமாலின் கீர்த்தி யுலகறியாமலே இருந்த
காணிலே வந்துதித்த வேதவடிவோ
அறியாதபாமரரை திருத்தியே வைகுண்ட
மாநகர் நிறைத்திடவே வந்த உருவோ
பெருமைபெரும் வானவரோ முனிவரோ வேறெவரோ
புவியிலே தான்பிறந்து திருமலையிலே இருக்கும் (அ

2. சடையாகும் சங்கரனோ சக்தி வடிவேலவனோ
சதுர்முகனெனும் அயனோஸ்வாமி எவரோ
வடமலையில் நாடகமாய் நடித்துமே யுன்கதையால்
அடியார்க்கு இறைவனென அறியவெனவோ
தடையிலா தெவ்வுலகும் திரிந்துமே ஸ்ரீஹரியை
கூவியே பாடிவரும் தேவமுனீ நாரதரோ (அ

3. தெளிந்து ராகவன் சரிதை வரைந்து வால்மீகருமோ
சிறப்புடனே கும்பமதில் ஜனித்தவருமிவரோ
உரைத்துலாவிய வேதம்திருத்தும் வ்யாஸருமிவரோ
சகருடனே சௌனகரோ சிலகெஜராஜரெனும் (அ

சிவஸ்துதி

விருத்தம்

1. கயிலயங்கிரியில்நாளும்மாகதபீடந்தன்னில்
மயிலிவர்பாலராகும்கணபதிவேலரோடும்
விலையிலாமணியுதிக்கும் அரவினை அணியாப்பூண்டு
சிலைமகள்பாகனான சங்கரர் துணையும்கொண்டே

2. செருக்குடன்எழுந்தகங்கைநதியுடன்மதியும்தாங்கி
விருத்தசெஞ்சடையும்முந்திபுறந்தனை எரித்ததோடும்
வருத்துவந்தடர்தகாமன்வென்றதோர்நயனம்தன்னை
தரித்திடுகோக்கம்செய்தசங்கரர் துணையும்கொண்டே

3. அகத்தினில்அடியார்மீதில் அன்பெனும்பொருளும்
போலும்
தகர்த்திடதுஷ்டர்தன்னை தரித்ததோர் அனலும்
போலும்
மகத்துவமதனால்நஞ்சைமருவென அடையமுன்னாள்
சுகத்துடனே புஜித்தசங்கரர் துணையும்கொண்டே

4. அரக்கனைவென்றதோலினுடையும் அபயமென்ற
கரத்தினில்சிறியமானும்சூலமும்மழுவுகாவி
உரத்துடன்கூவும்தொண்டர் துதிதன்னில்செவி
செலுத்தி
சுரந்தபுன்னகையும்கொண்டசங்கரர் துணையும்
கொண்டே

5. அசுரரும்சுரரும்போற்ற அந்தணர்கரங்களேற்றி
கசிந்துபல்முறைகள்சாற்றிநறுமலர் தூவிநாளும்
உசிதமாமையவென்றுவணங்கிடும் அடியில்யானும்
நசையுடன்நாஸ்பணிந்துசங்கரர் துணையும்கொண்டே

6. சிருவனுக்காயுதித்தஹரிநரசிம்மமாகும்
தருசிலைராமனுகும்தேவகிசிருவனுகும்
ஹரிதனை ததுதிக்கவென் றுசிவனருள் தனையும்பெற்று
சிறுமதியால்இசைத்தேன்சங்கரர் துணையும்கொண்டே

"சொக்கட்டானுடிகாரோ கண்ணன்" என்ற மெட்டு

பல்லவி

ஆருமிணையும்காணேன் ஆதிமூலனோடு
அண்டையிலிருக்கும்பல தொண்டரில் அனுமானு
க்கு (ஆ

அனுபல்லவி

பாரில் புகழும் பெரியோர்கள் முனிவரிலும்
வானில் ஸுரர்கள் அடியாரில் பலரிலுமக்கு (ஆ

சரணங்கள்

1. மாதவர்க்கு கந்தபாரி ஜாதமாத்தடியில்
ராகவன் சரிதைஎனும் சாகரத்திலமர்ந்து
தேஹம்மறந்திடவும் திருக்கைகுவிந்திடவும்
ப்ரேமையுடன்நயன வாரிபொழிந்திடவும (ஆ

2. அனந்தசயனனையும் யுகந்திடுவோரெதிரில்
மகிழ்ந்தமதியுடனே சிவந்தமுகத்துடனே
கனிந்து வெரும் ஹரிகான முறைத்திடவும்
அறிந்து அவர் குறையைவாந்தருவோரில் உமக்கு (ஆ

3. அரக்கருடனே இலங்கை நகரைஎறித்தவரே
சிறக்கும் ஜனகன் மகளின் அடியில் பணிந்தவரே
தரிக்கும் அரசின் முடிதினத்தில் ரகுபதியின்
திருவடிகளையுமுன் கரத்தில் தரித்தஉமக்கு (ஆ)

4. திருமாதுடன் ஹரியை கானம் புரிந்திடவும்
கருத்தில் நினைந்து மதை உரைக்கும் வழியறியேன்
அறிவில மர்ந்து ஹரி கானமெனும்பொருளை
அருமையுடனுரைத்து பெருமை எனககளிப்பாய் (ஆ

ஆதிசேஷன் துதி.

"மார்கழி மாதம் திருவாதிரை நாள்" என்றமெட்டு

மாண்டு—ஆதி

1. ஆதிசேஷனெம் ஹரிதாஸரில்முதல்
ஆனவனேசரணம்—என்
அய்யன் படுத்துறங்கும் அரவணையாகியே
அமர்ந்தவனே சரணம்

2. ஆழியிலே மலைதன்னைவளைந்து ஸுரர்க்
கமுதம் அளித்த தேவா—ஹரி
த்யானம் முறைத்திட என் ஹ்ருதயம் தனில் இருந்து
அனுக்ரஹித்திட வா வா

3. புரமெறித் தோனிடும் பூஷணமே பெரும்
பாம்பணையானவனே
திரு மலையாகிய வடிவுடன் நாதனை
தாங்கிய முடியோனே

4. பாரையுமது திருத்தோளில் அமர்ந்தவனே
பன்னக மேனியனே—ரகு
வீரனுடனுலகிலுதித்தவனே யவர்
மகிழும் ஸஹோதரனே.

5. கார்க்கோடகன் முதல் தக்ஷகன் வாஸுகி
அனந்தன் பதுமனோடு
சங்கன் குளிகன்மஹாபதுமனெனவும் மஹா

6. நாகமெனவும் முதலாய்
ஆதிசேஷனெனும் அனைத்திற்கும் ஒருபதியாய்
ஆசாயமர்ந்தோனே
தேசிகனே திருமலையில் ஹரி எனவே
ஸ்தாபனம் செய்தவரே

7. வஞ்சகருக்கெனவே நஞ்சைத் தரித்தெதிரே
நெடுமூச் செறி பவனே
தஞ்சமடைந்த ஹரிதால ரமர்ந்திடவே
திருமலை யானவரே

விருத்தம்

பஞ்சாயுத ஸ்தோத்திரம்

1, ஆதியானோர்தம் ஆயுதமே அவர் தரித்த
ஐந்தில் உயர்ந்த முதல் நாயகமே
யாதவனின்—ஜோதி ஒரு கோடி
ஜொலிக்கும் ஸுதர்சனமே
சக்கரமே நீ அருள் செய்————

2. கெங்கையுரை பாதன் கனிவாய் புறத்த மர்ந்து
ஓங்கும் ஒலியுடைய உத்தமனே—பூமருவோன்
பூரித்திடும் பாஞ்ச ஜன்ய மெனும் புண்ணியமே
சங்கமே நீ அருள் செய்——

3. அய்யன் கொடியோரை வதைத்து வரும் கெதையே
அடியார்க்கருள் புரியும் குணநிதியே—அந்த மிகும

கௌமோதகி எனவும் கண்ணன் காத்த மர்த்த
தேவா எனக்கருள் செய்——

4. மாலனடியார் ஸம்ஸாரர் வினைகளை கற்றிடவே
நாராயணன் தரித்த நந்தகமே—தானவரின்
ஆருயிரை வாட்டும் அந்தகனே கட்கமெனும்
ஆயுதமே நீ அருள் செய்

5. தீராதும் தீர்க்கும் திருவேங்கடத் தாசன்
வீரமதையுரைக்கும் பூஷணமே—அவன் காத்தின்
சாரங்க மேயுன் சரணாகதியடைந்தேன்
ஸமய மிது நீயருள் செய்

---

9. வெங்கடேச கீர்த்தனைகள்

பராபரக்கண்ணி

“என்னாத என்ன மெல்லாம்” என்றமெட்டு

1. ஆதி எனும் அந்த மெனும் அற்றதொரு ஆழிதனில்
நாரணனாய் ஓலையில் நிலையுடனே நின்றவரே
மன்றாடும் காற்றுடனே மையிருளா எத்திசையும்
நின்றாடும் ஓலையில் நித்தியனாய் நின்றவரே

2. மேகம் உமைச் சூழ்ந்திடவே மாலேயுன் மேனியதின்
ஜோதியினால் சுற்றிலுமை ஜொலித்திடவே நின்றவரே
மின்னலெனும் மேனியுடன் மீரியதோர் காந்தியுடன்
அண்டமதைச் செய்திடமுன் ஆதியுமாய் நின்றவரே

3. திக்குகளும் தோன்றிடவே தீரா உன் ஆயுதத்தால்
தற்பொருளாய் எவ்வுயிருக்கும் தந்தையுமாய் நின்ற
வரே

கூருமருள் நோக்கமுடன் குளிர்ந்தமலர்ப் பார்வை
யுடன்
ஒலித்திடவே சங்கமதைத்தறித்தெதிரே நின்றவரே

4. ஸ்ரீ மருவின் மேனியுடன் ஜனித்ததோருவஸ்திரமும்
ஜொலித்திடவே ஆபரணம் சுந்தரனாய் நின்றவரே
சுற்றிடவே சக்கரமும் சூரனெனவே கதையும்
அன்றலர்ந்த தாமரையும் தறித்தெதிரே நின்றவரே

5. வேதமெனும ஜீவனதில் வந்தனரைய மொய்த்திடவே
தாமரையும் தாழுமிரு திருவடியால் நின்றவரே
கரை இல்லா ஆழிதனில் தனியாகி நின்ற உன(து
அடியவனும் உன் துணையாய்(எனை) அழைத்தருளவே
னுமையா

6. அன்னை வினைதீர்த்து மெனை ஆதரிப்பா என்றடைந்
தேன்
மன்னுபுகழ் வேங்கடமா மலையோனே உன்சரணம்

---

10. காம்போதி—ஆதி

''ஆலோகயே ஸ்ரீருக்மணி'' என்ற மெட்டு

பல்லவி

ஆதியில வதரித்தார் ஆனந்த மாக (ஆ

அனு பல்லவி

மாதவம் மிகுந்ததிரு மாமலை யிலே ஹரியும் (ஆ

சரணங்கள்

1. ஸர்ப்பகிரி வேருடனே கர்ப்பகத்தருவது போல்
அற்புத வடிவுட கமர்ந்த துரையே

நற்தல மணிகள் பலஜொலித்திடும் ஸிம்ஹாஸனமும்
ஸர்ஜனரடைந்த பாதம் களித்திடும் பாதஸாமும் (ஆ

2. உத்தமனிடை தனிலே ஸுத்தபீதாம்பரமுடன்
சாத்திய ஸாளிக்ராம் வரிசையழகும்
பக்தருக்கிதமுடைய பசியதுளப மாலையும்
மத்தியில் திருமருவும் மணிவடம் அசைந்திடவும் (ஆ

3. இத்திசை வருகவென ஒலித்திடும் சங்கமும் ஸதா
சத்திடும் சக்கரம் துஷ்டர் சித்தமதிலே
சிஷ்டருக் கபயமென அழைத்திடும் காமதிலே
முப்பு விமதிக்கும் திருவாபரணத் தினழகும் (ஆ

4. சிலரின் சிறு பிழைகள் ஸகித்திடும் சிரு நகைப்பும்
பாலரும் பலருமுனை போற்றி உன் மலை
மீதினில் வரவரிந்து மலர்ந்திடும் முகத்தழகும்
ஜாலமுடனே தயவும் சேர்ந்ததோர் நயனமுடன் (ஆ

5. மூவரின் முதல் வனென அறிந்திடுமெனவே திரு
நாமமும் நிறைந்துலகை ஆளும் குடையும்
தேவருடனே எவரும்ப் ரமித்திடும் மதிப்புடனே
ஸ்வாமியுன் சிரந்தனிலே ஜொலித்திடும் கிரீடமுடன்

6. தாஸரின் குறை நிறைந்து கூசிடும் மணியும் கிரி
ராஜன் செவியணியும் நாசியழகும்
தேஜஸோடலர்ந்த மலர் வாஸியும் பத்மாவதியின்
நேசனும் வெங்கடகிரி ராஜனும் புவிமலையில் (ஆ

7. [மண்டலம் புகழ்ந்திடும் வைகுண்டமும் புவியில் வா
அண்டரும் அவருலகை தாண்டியே வா
ஆண்டவன் மலையில் நிலைகொண்டான் அயனுடனே
வேண்டியே ஹரியுடனே வசித்திடும் மலையிதுவோ (ஆ

8. விந்தையுடனே தொனிக்கும் துந்துபி ஒலித்திடவும்
அந்த மாயரம்பை எனும் ஸ்திரீகளெகிரே
வந்து நடனமிடவும் வானவர் மலர் தூவவும்
மந்த மாருதஸுகந்த பரிமள மிகுந்திடவும் (ஆ

9 மாதவர் முனிவர் மறை வேதமும் வனத்தினங்கள்
நாதமும் கின்னரிசை கீதமுடனே
ஆதரவோடென தன்னை வேதனையகற்றும் கிரி
நாதனே எனும் நடுவிலோதிடும் எனதுரையும் (ஆ

1!. எதுகுல காம்போதி—சாபு

"அப்பனே ஷண்முகநாதா" என்ற மெட்டு

பல்லவி

அய்யனே வெங்கடநாதா அடியேன் மீதிலின்னம் வாதா
அருள் பெறும் ஞனபோதா என் அன்னையைக்காக்க
வொண்ணுதா (அ

அனு பல்லவி

ஏழைஎன்றென்னை நினைந்தாய் இறைவனே மனதுநொந்து
பாவியான் படுந் துயரம் பார்ப்பதோ உன்தர்மமய்யா (அ

சரணங்கள்

1. தீனருக் கபயமென்று தேவனே சக்ராயுதத்தை
கையினில் தரித்ததொருகாணம் உறைத்திடுவாய் (அ

2. வேறு தெய்வம் யானறியேன் வரதனேயுன் அருள் கா
ணேன்
தெறிகிலேன் உன்பாதமன்றி திருமகள் மகிழுழ்நாதா

3. தருணமென்றுனையழைத்தேன் திருமலையாசேயீயும்
சிறுவனை வெறுப்பதுன்தன்பெருமையோ உரைத்திடு
வாய் (அ

12. கமாஸ்—ஆதி

"மானே ஈலங்கிடவா என்ற மெட்டு"

பல்லவி

ஸ்ரீராஜசிகாமணியே
கேவலமாகும் ஈசர்ஸேவைக்கிரங்கும் (ஸ்ரீ

அனுபல்லவி

பூமிதனில்கபடர் பூஜைதவிர்த்து நிஜ
தாஸர் களின் ஹ்ருதயாஸனத்தில மர்ந்த (ஸ்ரீ

சரணங்கள்

1 பூவைதினம் வருடிபோற்றும் பதம் கோக
உமை கூவும் அடியார் மனை கோரி நடக்கும் (ஸ்ரீ

2. நேமமுடன் மலையில் பாகம் பல செய்தும்
தீனரளிக்கும் திருவமுதில் மகிழும் (ஸ்ரீ

3. பன்னகராஜன் படர்ந்த மலை நீங்கி
அன்னையைக் காக்க முன்வாரும் ரிஷப (ஸ்ரீ

---

13. ஆபி ராகம்—ஆதி தாளம்

"என்னேரமும் உந்தன்" என்ற மெட்டு

பல்லவி

இதுதானோ திருப்பதிமலை எனுமெங்கள்
ஈசன் வாழும் ஸ்தலமோ (இ

அனுபல்லவி

பொன் னுலாவும்குளமும் பூலோகர் நிலையும்
சொல்லிடவும் எனக்கு வல்லமையோ ஐயா (இ

சரணங்கள்

1. உன்மகுடா மணி ஒளியும் செவியும் அதில்
விளங்கும் மாமணியும் அரிதான வடி வழகும்
பாதி மாமதியைப் போன்ற லலாடத்தில்
நாதன் முகத்தில் நாமம் விளங்க காணும் தேடிநின்ற (இ

2. சிலர் வரவும் சிருபுன்னகையாலெமை
வருகவென்று ரையாடும் பாவனேயும்
கருணையாகு மிரு நயன மலரும் எதிர்
கண்டுகளித்து அன்பு பெருக ஐயன் தெரிசனமும் (இ

3. தாஸர் முறையும் தருவேன் அபயம் என
தரித்த ஆயுதத்தின் ஒளியும் செங்காமும்
ஆவலோடு கடல் மகளுலாவுமணி
மார்பும் துளப மாலையழகும் மகிழ்ந்து யாணும் கண்ட

4. திருவின் மருவும் திருப்பாதத்தை வேண்டுவர்க்
கபயமென்ற கங்கணமும் கிங்கிணியும்
பராமஸாத் வீகரின் பக்த கோஷ்டிகளும்
ப்ரீதியுடனே அன்னே துயரம் பார்த்து ஆதரிக்கும் (இ

---

14. மோஹனம்—ஆதி

"என்பள்ளி கொண்டீ ரய்யா" என்ற மெட்டு

பல்லவி

என்பள்ளி கொண்டீரய்யா? ஏழுமலை மேல் (என்

அனுபல்லவி

தேவமாமுனிவர்க்களித் தநுளப முடன்
தேவி மூவரொடும் திரு மருவுடனே (என்

சரணங்கள்

1. கோகுலம் தனில் உனது—அன்னை எசோதை
கூவியலைய நினைந்தோ?
தேவனேயுனை நினைந்து—கோபியர் கூடி
தேடியலைய நினைந்தோ?
ஆவலோடுனது தோழரோடு விளையாடியலுத்தீரோ?
காவல் மீறியுங்கள் காலி ஏது மிந்தக கானில் விடுத்தீ
ரோ?
ஓதும் கீதம் தன்னில் மெல்லியோரும் மனம் வாட மதி
த்தீரோ?
தாமனேயுனது மாமனுட கொடுமை தன்னை நினைக்
தீரோ?
வனம் சென்று வழி தனை மறந்தோ?
இனத்துடன் முனிந்தோ? இடையரைப் பிரிந்தோ?
திருமலையில் போதும் போதுமிட மாதருடனே தினம்
வாது செய்வதினி எதெனை நினைந்தோ (என்

2. ஆழி தனிலு மறிந்தே—அலைவரும்
அழைத்திடுவதில் சலித்தோ?
தாழியுடைக்கும் தருணம்—தொடர்ந்து வரும்
கோபியரையும் வஞ்சித்தோ?
மாதர் சேலை தனை ஒளித்த சேதி நந்தர் அறிய மறை
ந்தீரோ
நாதன் உன்னை உறலோடு வரிந்திடு மன்னுளில் அமர்ந்
தீரே?
சாதையோடு மணம் புரிந்த வேளை இதில் வசித்து மகி
ழ்ந்தீரோ?
ஆதி நாளில் ப்ருகு முனிவர் உதைக்க அவமான மடை
ந்தீரோ?

மதுரை என்றோ? மனம் களித்து நின்றோ?
தேவகி துயர் கண்டோ? திருமகுடம் கொண்டோ?
புவி புகழும் வீமராஜன் மகள் பெண் மணியுடன் எட்டு
தேவி மாருடனே திருமலை மீதினில் (என்

3. வாரு மென்னும் என் உரையில்—எத்திசை என
ஏறி சிகா மடைந்தோ?
பாரிலுன் பாத மடைந்தோர்—வினையகல
ஏறு மெனவே மகிழ்ந்தோ?
முறை கடந்து தனம் பறிக்கும் வீணர் பணம்
பறிக்க வென்று நினைந்தோ?
வினை நினைக்கு மவர் குலமொழிப்ப தென
விரதம் தன்னிலுயர்ந்தோ?
தரையின் மீதிலிரு நயனம் பதித்துனது
தாஸர் தன்னை யறிந்தோ?
கரை கடந்த கருணை கடாக்ஷ மென தன்னை மீதில்
பொழிந்தோ
சங்கைகொண்டோ?ஸமுத்திரமிதென்றோ
சிற்றுலிலை ஈதென்றோ?ஸர்ப்பசயன மென்றோ?
தேவர் துதிக்கும் எங்கும் போற்றும் திருவேங்கட
பதியென
சங்கு சக்கர சாரங்க கதையுடனே (என்

---

15. சுருட்டி—ஆதி

"காணவேணும் லக்ஷம் கண்கள் சீதாதேவி" என்ற மெட்டு

பல்லவி

மலை இடைய வதரித்த எனதுகுல, மாகத மணியிதுவோ

அனுபல்லவி

கலியிலனை வருக்கும் விலையறியா தொரு
கனகமலை முடியில் கண்டு நாளும் எடுத்த (மலை

சரணங்கள்

1. ஆதியில் எங்கும் நிறைந்த—ப்ராளயம் தன்னில்
ஆலிலையில் சயனித்த
நாபிக் கமலம் தன்னில் நான்முகனைப் படைத்து
பூமி தனை ரக்ஷிக்க பூர்ணாவதாரனாய் (மலை

2. இந்திரன் மழை சொறிய—எடுத்து மலை
தூக்கி நின்றதும் இவரோ
சொந்த முடனே சோதை சேர்ந்து உரலுடனே
வரிந்தக்ருஷ்ணன் கலியில் வெங்கடரமணனே (மலை

3. இஷ்டமெதுவும் கொடுப்பார்—அவர் வரியை
வட்டியுடனே பறிப்பார்
அஷ்ட மகிஷி பதி அறிவிலொளிக்கும் ஜோதி
அன்னைக்கிரங்கும் ஹரி அான் விஜயன் ஸாரதி (மலை

---

16. பிலஹரி—ஆதி

''ஸஞ்சலம் சொன்னவேண்டாம்'' என்ற மெட்டு

பல்லவி

வருவா எந்தன் துரையே—முராஹரியே (வரு

அனுபல்லவி

வருமை தவிர்த்திடவே கருணைக்கடலே இங்கு (வ

சரணங்கள்

1. உன்னிதமாய்த்தவத்தின் உகந்த முனிவர்க்கெட்டாது
   என்னையழைப்பதொரு பெண்ணெனவே மறந்தாய்
   முன்னே சபரி மனம் மகிழ்ந்து கனியளிக்க
   கருணையுடன் கருத்தில் க்ரஹித்து புஜிக்கலாமோ (வ

2. வந்து தனம் மிகுந்தோர் வருந்தி யுபசரிக்கும்
   விந்தைதனில் மிகுந்த வறியோனென்னை மறந்தாய்
   கந்தையணிந்த ஸுதாமனை எதிர்சென்றழைத்த
   கடகமலைப் பதியே காக்கும் குணநிதியே (வ

3. மன்னரெனும் மலைக்கு வாவென்றழைக்கும் என்னை
   மனையிலழைக்கும் என்ன உரிமை என நினைந்தாய்
   வெண்ணைத்திருட வெகுமனைகள் நுழைந்தவனே
   அன்னைவினை தவிர்ப்பாய் ஹரி வெங்கடேசனே. (எ

---

17. ஸஹானா—சாபு

"க்ஷேமம் குரு கோபாலா" என்ற மெட்டு

பல்லவி

தேடி அலைந்ததிவரோ நான் தினமும்,
கொண்டாடி இருந்ததிவரோ (தேடி

அனுபல்லவி

ஆடும் படத்திலொரு கோடி ஸ்தலந்தனிலே
அலர்ந்த மலர் மிகுந்த குளிர்ந்த வனந்தனிலே (தேடி

சரணங்கள்

1. யாஜித்ரடைந்த தீனர் அகமகிழ்ந்து
   கண்ட முடியுமிதுவோ

தேசிகரெனும் ஆதிசேஷன் துதித்திடவே
தாலன் துதிக்கிரங்கி தரித்த திலகமிதோ (தேடி

2. போரில் விஜயன் ரதமும் வாரை எடுத்து
விரட்டிய காமிதுவோ
பாரில் குயவனிட்ட பாலையணிகளையும்
மேனிதனில் அணிந்த மாயவனும் இவரோ (தேடி

3. நீசன் உகந்து அளித்த பாது கைதனை
தரித்த பாதங்களிதுவோ
சேஷசிகரமதில் வாஸன் வெங்கடகிரி
ராஜனெனது அன்னை தோஷம் விலக்கிடவே (தேடி

---

18. ஸௌராட்டி—ரூபகம்

"பித்தா பிறைசூடி" என்ற மெட்டு

1. வந்தேன் மலைகண்டேன் உமைவானோர் பெருமானே
என்தாய் எனும் செந்தாமரையாளின் மருவோனே
பிறியேனெனும் பார்த்தனுடன்ப்ரேமையருளாலே
பிறவிதனில் மூன்றில் உடன்வந்த பெருமானே

2. தந்தை செய்யும் துன்பமதைத் தாளாதவன் போலும்
இந்திரையின் நாதா உனையழைத்திடவும் பாலன்
விந்தை தரும் மேனியுடன் வந்த நரஸிம்மா
வந்தே என தன்னை வினைதீர்க்கும் கிரிதாமா

3. அண்ணனொரு துன்பமதில் எண்ணமது நொந்து
உன்னடியேன நானே எனும் உத்தமனைக் கண்டு
மன்னன் முடிதந்த ரகுராமா பரந்தாமா
இன்னேரிடர்தீர்க்கவென கொண்ட பலராமா

4. போரும் இனி வேண்டேன் புவி அரசும் இனி வேண்டேன்
தாராயுந்தன் பாதமென்ற தாலனுரை கேட்டு
தீரனெதிர் நீதிதனை புகன்ற கோபாலா
ஸ்ரீவெங்கட நாதா இருலாங் தரியர் லோலா

---

19. செஞ்ஜுருட்டி—சாபு

"ஆபத்தைத் தீர்க்க ஒண்ணுதா" என்ற மெட்டு

பல்லவி

தருணமுன் அருள் காம் தாரும் என்ஸாமி (த

அனுபல்லவி

மலையை விட்டிறங்கி என் மதிதனில் சேரும் (த

சரணங்கள்

1. அலையில் துரும்பதுபோல் அலையுதே எந்தன் மனம்
நிலையாயுன் நினைவெனக்குதிப்பதெந்நாளோ (த

2. திருவின் மருவிளங்க துளபமாலை குலுங்க
அபயமளிக்க அன்னைகவலைகள் நீங்க (த

3. தயவின் அலைதளும்பும் நயனக் கடலிலொரு
திவலை அளிப் பதிலுன் குறை தனை கூறும் (த

4. கனகமலைப் பதியே கார்க்கும்க்ருபாநிதியே
விஜய வெங்கட கிரிநாதனே வாரும் (த

---

20. செஞ்ஜுருட்டி—சாபு

காவடிச்சிந்து வர்ண மெட்டு

"மஞ்ஜுள நிகர் குந்தள மின்னே' என்ற மெட்டு

1. தேவனே திருமருவோனே
தங்கமலையில் எங்கும் புகழ
தங்கிய திருவடியோனே இந்த
தீனன் யானுனை கானம் செய்யவுன்

தாலரோடெனை நீ அழைத்திட
தந்தருள் வரமென்னய்யனே
தாமோதரனே ஓ மாதவனே
தாமரையனைய கண்ணனே

2. ஆலிலையமர்ந்த பாலனே
அலர்ந்த மலர் மடந்தையிரு
மாதருக் கிசைந்த லோலனே, உமை
அண்ணனே முகில் வண்ணனே உனை
எண்ணியே வரும் புண்ணியர்க கெதிர்
புன்னகை புரியும் மெய்யனே
பாவியரிந்த பாரில் மிகுந்தோர்க்கு
அன்னவர்க் கரிய மாயனே

3. வாரணமிடும் அபயமே
நமக்கெனவே நடந்தவனே
தாரணிதழைக்கும் தெய்வமே புகழ்
கருணையங் கடல் நயனனே பெரும்
அரவிலே தினம் சயனனே இட
மாதருக் கினிய சேயனே
தானவர் முனிவானவர் முதல்
மூவருக்கரிய மாயனே

4. உன்னரும் துணைவரும் உம்மை
அடைந்து மிக பயந்திடவே
முன்னகங் குடை கவிழ்தோனே என
தன்னையின் வினை தன்னையே தவிர்த்து
உன்னடி தனில் என்னை சேர்த்திடுமே
ஆதரித்தருளும் ஐயனே
அனைத்துலகை அளித்தவனே
ஆதிவெங்கட கிரீசனே

---

21. ஆரபி—ஆதி.

"ராமா உனை வேண்டி" என்ற மெட்டு

பல்லவி

வாவா மலையோனே இங்கு (வாவா

அனுபல்லவி.

வரம் தாரும் தேவர்பெருமானே (வா

சரணங்கள்.

1. பாவியானு மிந்த பாரிலொரு பிறவி எடுத்தேன்
தேவனேயுனது திருவருளின் பெருமை மறந்தேன்
ஆவியோடுலகில் அனைத்தும் நிஜமெனவே
நீரில் குமிழி எனும் நினைவிழந்தேன் கிரிநாதா
இந்த நீரில் குமிழி எனும் நினைவிழந்தேன் ஹரி(வாவா

2. காலும் கையுமளித்த காரணமே தென நினைந்தேன்
மலர் பறித்துனக் களித்துனைப்ரதக்ஷிணம் புரிய. வென்
றறிந்தேன்
தரையிலனையவரும் துரிநகைக்கு மிந்த
நாரி எனவுமென்னை எனளித்தாய் கிரிநாதா
இந்த நாரி எனவுமென்னை எனளித்தாய்ஹரி (வாவா

3. கர்மவசத்தாலதி ஜன்மமெடுத்திடவும் துணிந்தேன்
புழுவெனிலும் உனதடியைப் போற்றிடவே வரம்
வரித்தேன்
அதிலு முந்தனை மாவாமலிருந்திடவே
ஜன்மமொழிந்துனையும் சேர்ந்திடுவேன் கிரிநாதா
இந்த ஜன்மமொழிந்துனையும்சேர்ந்திடுவேன் ஹரி (வா

4. பன்னகமெனும் பெரும் பாயலையும் துறந்த தேவா
திருச்சின்ன முடன் உலகில் உதித்ததிருமலையின் தீபா
மன்னு புகழும் வெங்கடாசல மூர்த்தியே
அன்னை வினை தவிர்த்து ஆதரிப்பாய் கிரிநாதா
எந்தன் அன்னை வினை தவிர்த்து ஆதரிப்பாய் ஹரி (வாவா

---

22. யெஞ்ஜருட்டி—ஜம்பை

திருப்புகழ் மெட்டு

"கருவினுருவாகிவந்து" என்ற மெட்டு

1. அலைகடலிலே துயிலும்
திருமலையிலே வளரும்
கருணை வடிவாய் விளங்கும் பெருமானே

2. சரண மெனவேயலரும்
கிருமியொரு பேதை எனை
மறந்திடுவதுன் அழகோ திருமாலே

3. பக்தருள்ளந்தோறும் தினம்
கீர்த்தனங்கள் செய்தடியும்
மெத்தவலியாகுதென மதித்தாயோ

4. நித்தியமுன் பாதமதில்
வைத்த மலரே கிடைத்தால்
மெத்தவும் மகிழ்ந்திடுவேன் பெருமானே

5. தொண்டர் மிகுந்தால் உனது
தொண்டெனது என்று தினம்
சண்டையிடு வாரெனவே — சலித்தாயோ

6. கண்டுனது ஆலயத்தை
வந்து வலமே தினமும்
தெண்ட மிடவே யதிலும் — குறையாமோ

7. நித்திய முனையழைக்கும்
சப்தமதினால் செவியும்
மெத்தவலியாகு தென — நினைத்தாயோ

178205

8. சப்தமுமிலா தெனது
சித்த மதிலே புகழ்வேன்
முக்தியளிப்பாய் எனது — பெருமானே

9. தேவாடியோர் முனிவர்
சூழுமிந்த வால மதில்
பாவி நானுகு மென — மதித்தாயோ

10. ஆவலுடனே உனது
கோவிலெதிரே இருந்து
கூவிடவுமே எதிரில் — வருவாயே

11. என்னுளம் பெருகும் எனது
அன்னையினையே சிதா
செம்மலரின் சேயுடனே — அருள்வோனே

12. சின்ன வடிவாகியே முன்
தன்னிகரிலா துயர்ந்த
மன்னுபுகழ் வெங்கடமா — மலையோனே

23. கமாஸ்—ரூபகம்

"வெண்ணெயுடன் பால்தருவேன்" என்ற மெட்டு

பல்லவி.

மாதவனேவாரு மன்னே வேதனை தீரும் (மாத

அனுபல்லவி.

நீதவா ஸ்ரீயாதவா வினோதாமலை நாதாவா

சரணங்கள்.

1. ஆதியே மூன்ஜோதியாகி அந்த மில்லாத
நாதனே நானுனை நாடி நொந்தே மனம்
வந்தேனய்யா (மாத

2. பேதையான எந்தன் மீதில் சோதனை ஏனோ
சோதைமைந்தா ஸ்ரீமுகுந்தா, செந்தாமரை
பாதா வாவா (மாத

3. பக்கமதில் ருக்குமணியாள் பாமையோடு
சக்ராதாரியான நீரும் ஸ்ரீவெங்கட நாதா வாரும் (மாத

---

24. செஞ்ஜுருட்டி—ஆதி

"மார்கழிமாதம் திருவாதிரைநாள்" என்ற மெட்டு

1. நாராயணன் திருசேவை புரிந்திடவே நினைந்
திடுவாய் மனமே
பாரமுயர்ந்த ஸமுஸாரமெனும் கடலை கடந்திடு
வாய்தினமே

2. திருமாமலைதனை கடந்திடவே அயன் தந்தான் இருகா
லும்

அதைத் அறியாமலும் நர்பொருளைக் குறித்துலகில்
அலைந்திடுவார் நாளும்

3. திருமலை வீதியில் படிந்துவலம் புரியதந்தான் மேனிதனை
இதில் அணிந்திடும் பூஷணம் முடிந்த கெதியிலுன்னை
துடர்ந்திடு வதும் காணேன்

4. ஆய்ந்த மலரெடுத்து ஐயன் திருவடியில் தூவிடவே
அளித்தார்
அதை உழைத்து நாளுமிந்த உடலை வளர்த்த பலனு
ரைத்திடுவாய் நெஞ்சமே

5. நாராயணன் திருநாமமோராயிரம் நிலையாயுரைத்திடவே
நாவையளித்து மிதில் உரைத்த மொழியிலொருநிஜம
தையானறியேன்

6. செந்திருநாமனைக்கண்டு குளிர்ந்திடவே தந்த நயனமி
தினால்
கண்டு உலகின் பலகாக்ஷிகளின் பலனைக்கூறிடுவாய்
மனமே

7. தேவி இருவருடன் தயவுடனே திருமலைமீதமர்ந்தோ
னே
என் தாயின் வினைதவிர்த்த கோவிந்தனே திருவெங்கட
நாயகனே

---

25. பியாக்—ஆதி

"இதுதானோ தில்லைஸ்தலம்" என்ற மெட்டு

பல்லவி

அறியாமலுன்மஹிமை அலைந்தேனந்நாளுமே
அறியாமலுன்மஹிமை

அனுபல்லவி

முறையாலுனைப்புகழ அறியாதவனெனவே
என் ஹ்ருதயமதனிலே ஒருகுருவாயமர்ந்தவனே (அ

சரணங்கள்

1. தாணிதனில் நிறைந்த தெய்வமதிலுனையே
வரதனென அறிந்தோர் அடிபணிந்தேனையனே (அ

2. சலியாதுனையானொரு க்ஷணமாகிலும் மறவா
தறியபொருளே எனக்களித்திடுவாய் ஹரியே (அ

3. பன்னகசயனனே பத்மாஸனி நாதனே
அன்னைவினைதவிர்ப்பாய் ஹரிவேங்கடராஜனே (அ

---

26. இந்துஸ்தான் பியாக்—ஆதி

"ஹனுமானே நீயே கனவானே" என்ற மெட்டு

பல்லவி

பெருமானே பணிமாமலையோனே (பெ

அனு பல்லவி

சரணுகெதியடைந்தேனுனைத்தானே (பெ

சரணங்கள்

1. அரக்கனொருவனுந்தன் திருக்கையினால் மரிக்க
வரித்தவரமளித்து இரக்கமுடன் மடித்து
தழைக்கும் க்ருதயுகத்துன் திருமதியாலே
வரித்த ரிஷபகிரிக்கொருபெருமானே (பெ

2. நீதிநிறைந்திடும் த்ரேதாயுகம் தனிலுனை
கோரும் அஞ்சனைக்கனுமானையளித்தாயே

யாலும் அருக்குணைவன் உதித்ததினாலே
எக்காலு மஞ்ஜனகிரிக்கொருபெருமானே (பெ

3. திசையுமுலாவும் தென்றல் அரசனுனைவிரும்ப
மறைத்தபடதளையுடன் தெறித்து மதமடக்கி
செழித்திடும் த்வாபரயுகமதிலேகிரி
சேஷசிகரந்தனில் உறைந்திடும்மாலே (பெ

4. அங்கஜனையளித்த ஆண்டவனேஎன
தன்னைவினை தவிர்த்து ஆதரிப்பாயே
எங்கும் அரங்குறைந்து மங்கும் கலியுகத்தில்
வெங்கடகிரிதன்னில் உறைந்திடும் மாலே (பெ

---

27. அடாணா—தாளம். ரூபகம்.

“முருகன்திருமால் மருகன்” என்ற மெட்டு

பல்லவி

அயனே அரனே ஹரியானவனே
அதியங்கமுடன் முதல்வெங்கடநாதனே (அ

அனுபல்லவி

கதிரோன் மதியோடனலாகிய
கலையேசதுர்மறையேமலர்கமலாஸனிபதியாகிய (அ

சரணங்கள்

1. சூளையாலிட்டசிருகலைகண்டவன் ஓலமிடும்போதே
அதியாவலுடனே அளித்ததினாலது மேலெனக்கென்
றுயே
சிலனவன் ஸதிசேயுடனே ரதம்கொண்டு அழைத்து
மறைந்திடும்வேளையில்

நாவலன்கர்வம் குறைந்திடவேயவன்
கடுமையெனும் தவஸ்கண்டுனதடியாருடன் அழைத்
தேகிய (அ

2. தாழியுடைத்துதனிழ்ந்துநடந்ததிருவடியினாலே
முந்திஆழியுலகும் அரசன் பலியோடளந்தபதத்தாலே
ஆவலுடன் கெஜராஜனுடன் வெகுப்ரேமையுடன்
தினம் கூடியுலாவிய
சேவடியாலென் சிருமனையிலொரு
க்ஷணம் வந்திடும் அதுகண்டுடன் எனதன்னை வினை
சென்றிட (அ

---

28. முகாரி—சாபு

"மூகத்தைக்காட்டியதேகம்" என்ற மெட்டு

பல்லவி

காசில்மிகுந்தகிரிராஜனெனும்பெயரை யோஜித்திடு
மென்னய்யனே (அ

அனுபல்லவி

கேசவனே யுங்கள் கீர்த்தியனைத்துமிந்த
நாளில்மறந்ததொருகாரணமேனய்யா (கா

சரணங்கள்

1. பாலவடிவுடனேகோலுங்குழலுமிரு
காத்தில்தரித்துமந்தைதுளிபடிந்திடவே
நாரியரேயுங்கள் ஆநிரைகளுமிதோ
வந்ததெனஉரைத்தவசனமதைமறந்து (கா

2. சீலனெனவும் பலிராஜன்உலகம்தன்னில்
நாலுபுஜங்களிலும் ஆயுதங்கள்தரித்து

தாஸன்வசத்தில் அவன் தலைவாசலிலமர்ந்து
காவல்புரியும் அதைக்கருத்தில்மறந்ததென்ன (கா

3. அன்பனுடன் எதிரில் ஆடும்பகடைதன்னில்
அன்னைலக்ஷ்மி அருளால் உன்னைஜயித்திடவே
திருமலையுடனுந்தன் திவ்யாபரணமெல்லாம்
முன்னவனுக்கெதிரில் வைத்ததையும்மறந்து (கா

4. வேதகிரிதனிலேவேதியரின்மனையில்
காவடிதனையுந்தன் தோளில்சுமந்ததிரு
நாயகனேயவர்ஏவும்தொழிலனைத்தும்
இஷ்டமுடன்புரிந்ததேன் மறந்தாய்இன்று (கா

5. பஞ்சவருக்கெனவே பாவி எதிரில்நின்று
ஐந்துநகர் இரந்து நின்றதையும்மறந்து
வஞ்சகமேனிந்த வறியாளன்னையிடத்தில்
சஞ்சலம்தீர்த்திட ஸ்ரீ வெங்கடேசனே (கா

---

29. தேசிகம்—சாபு

'உன்னைநம்பினேன் மாதவா'' என்ற மெட்டு

பல்லவி

சரணம் ஸுஜன கருணா ஸ்ரீரமணா (சர

அனு பல்லவி

சரணம் அடைந்து முந்தன் ஸ்மரணம்புரிந்துமின்னும்
கருணைவராதெதந்தன் கர்மபிதா, இன்னும் வாதா
உன் தர்மபிதா, தர்மபிதா ஸ்ரீ வேங்கடநாதா (சர

சரணங்கள்

1. அன்னைஎனஉதரந்தன்னிலடக்கிஉலகனைத்தையும்
அளித்தோனே

உடன் தங்கை எனவுமதை ஆதரித்திட மலைமீதவதரித்
தோனே
மைந்தன் மழலைச்சொல்லில் மகிழுந்திடும்போலும்மை
கூவுமெங்களுரையில் குளிர்ந்திடுவோனே
கிரியானே, தேவர்கோனே, தேவர்கோனே திருமரு
வோனே (சா

2. எந்தனுக்கிதையும் இன்றளித்திடெனசிருவர் இறைந்
திடுவதினாலும்
உடன்எங்கும் அலைந்தலையும் அளித்து அவருடனே
மகிழ்ந்திடுவதுபோலும்
உந்தன் சரணமென அடைந்துமென்து அன்னை
பந்தம்தவிர்ப்பதுனக்கென்ன பாரம் வந்துகாரும்
என் சிந்தைதீரும், சிந்தைதீரும் உன் சரணத்தில்
சேரும் (சா

---

30. காம்போதி—கண்டசாபு

"காவேரிஸ்தானம்பண்ணி" என்றமெட்டு

பல்லவி

வருவாய்என்மாதவனே வரதனே யானழைக்க
வாராததிதுநீதியோ (வரு

அனுபல்லவி

தேவாதிதேவனென்று திருமலையிலுறைவோனே
தீரனேஎதுவீரனே என்ஸ்வாமி.

சரணங்கள்.

1. மாலென்று என்னுனையை மதியாமல் நீ இருந்தும்
மறவாமலுனைநாடினேன்

காளிதனைமேய்த்தவனே கம்ஸனுயிர்மாய்த்தவனே
கண்ணனே முகில்வண்ணனே என்ஸ்வாமி
கரியானை யிடர்தீர்த்த பெருமானெனும் அடைந்து
தயவில்லாதிது தர்மமோ (வரு

2. அந்தமிகுபைந்துளபஹாரனேசோதையுடன்
நந்தனரும்தவபாலனே
செந்திருமருவுடைய சுந்தரனே எனையீன்ற
தந்தையே உனைநாடியே என்ஸ்வாமி
வந்தேனுந்திருநாமம் வருந்தியே யானழைத்தும்
மைந்தன்மீதருள் காணிலேன்

3. பாண்டவரின் தூதுவனே பலிராஜன் யாஜகனே
பகையசுரர்க்கொருகாலனே
ஆலிலையின்மேல்துயின்ற அருமறையின் முதலோனே
ஐயனே மலர்க்கையனே என்ஸ்வாமி
ஆதாரமாயுனது பாதாரமேயடைந்தேன்
அன்னைவினை தனைத்தீருமே (வரு

மலைமகளுடன்பிறந்த மாலனே ஆனைமுகன்
ஆருமுகன் அரும்மாமனே
கலைமகளின்நாதனையும் கருணையுடன் ஈன்றதிஜக
தீசனே கிரிராஜனே என்ஸ்வாமீ
தரைமகளுடன்விளங்கும் திருவேங்கடேச்வரனே
தேவனேமுதல்மூவனே (வரு

---

31. தேவகாந்தாரி—ஆதி

“பரந்தாமனேயன்றிவரர்தான்” என்ற மெட்டு

பல்லவி

தரைமாமகளுடன் திருமலையிலமர்ந்த பெருமானெனன்
னம்தேவா

அனுபல்லவி

1. சரணமென்றடைந்தேன் முறையுடன் பணிந்தேன்
மறந்தேனனைத்தையும் அடைந்தேன் உனைகெதி (த

சரணங்கள்

1. சிலையின்பிறவி எனக்களித்திடிலுன் திரு
மலையின்படியடைந்தால் மகிழ்ந்திடுவேனய்யா
நடந்திடுமடியவர் தூளிபடிந்துனது
திருவடியில்வசிக்கும் கெதிபெருவேனய்யா (த

2. மலையிலென்பிறவியும் வானரமெனிலுனக்
களித்தப்ரஸாதமுடன் வருவோரையும்
தொடர்ந்தவர்தனையேபுரிந்துணைவலமே
முடிந்தபின்கெதியிலுனை அடைந்திடுவேனய்யா (த

3. உன்மலையில் மரமாய் உதித்திடிலெரித்தெனை
இசைத்திடும்பாகம் நீர் புஜித்திடுவதினால்
கண்டுனைமகிழ்வேன் களிப்புடன் புகழ்வேன்
வண்டென உன் திருவடிமலரில் வஸித்திடுவேன் (த

4. அன்னைவினை தவிர்த்து ஆதரிப்பாயென
எண்ணியழைத்தினியும் தாமஸமேனய்யா
என்சொல்லின் குறையோ உன்குலமுறையோ
வாரும் வாரும் திருவேங்கடநாதனே (த

---

32. யதுகுலகாம்போதி—தாளம்—சாபு

"காலைதூக்கி நின்றாடும் தெய்வமே" என்றமெட்டு

பல்லவி

வருவாயேபெருமானே தெரிசனம் தருவாய் கனவானே

அனுபல்லவி

அரவிலமர்ந்தவனே அலமேலுரமணனே
கரையும்மதியுடைய திருவேங்கடேசனே (வரு

சரணங்கள்.

1. பொங்கும்குடகுமுதல் கெங்கைநீராடியே
எங்கும்ஸ்தலத்திலுனை தேடுவதெனிலோ
மங்கையெனும்மதிலைமுன்பேளடுத்தெனையும்
ஈன்றதும்எனய்யா தாண்டவன் நேசனே (வரு

2. தங்கும்மனைதுரந்து அங்கமதைவெறுத்து
எங்கும் உனைநினைத்து ஏற்றுவதெனிலோ
கொடியும்பசிதணியேன் நடவேன் ஒரு அடியும்
காதாஉனைமறவேன் நீயேகெதியடைந்தேன் (வரு

3. மறைந்துவனம்தனிலே இருந்துதவத்திலுனை
அறிந்திடுவோமெனும் ஆவலும்மீற
மறைந்தபொழுதிரவில் பயந்தேமிவவிருந்தும்
பேதைமதியுடையேன் எதுசெய்வேனய்யா (வரு

4. வாடும்வறியவரை தேடிதானமளிக்க
நாடினும் முதல்வறியோன் நான்அறிவாயே
மார்பில் கடம்பணிந்தோன் மாமனே உனையன்றி
யாரும் துணையறியேன் அன்னைவினைதீர்ப்பாயே (வரு

---

33. செஞ்சுருட்டி—ரூபகம்

"சலுங்கிடுகிருள்மீனலோசனி" என்ற மெட்டு

பல்லவி

முந்தியுதித்ததோர்மாதவனேயுங்கள் தந்திரமும், இனி
கண்டேன் (மு

அநுபல்லவி

எந்தவிதமும் விடுவதில்லை உம்மை என்றுதிடமுடன்
கொண்டேன் (மு

சரணங்கள்

1. யாவரும் வந்து அடுப்பதினால் நடுஸாகரமே நிலை
கொண்டாய்
தாவியதையும் கடந்திடவானாம் தானொருகாவலும்
நன்றாய் (மு

2. நத்திடவேயவர்பக்தனெனவிடசித்தமகிழ்ந்துன்னைக்
காண
பக்தபராதீனன் என்றபெயருடன்போவில்துயில்
கொண்டாய்

3. மெத்தபயந்துனை கூவிடவே யவர்சித்தமிரங்கிடக்
கண்டநல்
சித்துருவாகும் பறவையிமேலகிடஸித்தமுடன் அதைக்
கொண்டாய் (மு

4. இத்தனைதூரம் அலைந்திடுவோ திபித்தரெனமறைந்
தோனே
பக்தியெனும்வலைவீசிடுவோரெதிர்தானேயவதரித்
தோனே (மு

5. தாமஸமின்றிஎன் அன்னையைக்காத்திட ஸ்ரீமதியோ
டுணைத்தேடி
பாமலர்மாலையளித்திடவேங்கடதாமனுனை தினம்பாடி

34. காம்போதி—சாபு

''ஈவேளநலுகுருலேகிராரா'' என்ற மெட்டு

பல்லவி

திருவேங்கடாஜல மூர்த்தியே
புவிமூன்றிலும் இவர் கீர்த்தியே.

ஜாவளி மெட்டு

சரணங்கள்

1. ஆதிசேஷனில் அமர்ந்தவன் நகரம்பரந்தனில்
இருந்தவன்முதல்
காதர்மூவரில் உயர்ந்தவன் திருமாதுடன் அவதரித்த
வன்——— (திரு

2. கோலவேமகன் சோதையின் ஸுதன்
கூறும்ஆயிரம்நாமனும்
காரணன்முதல் நாதநாயகன் நாகமாமலேசேகரன் (திரு

3. அரக்கர்தன்னையும்வென்று கௌசிகன்யாகம் தன்னை
யும்காத்தவன்
களிப்புடன்துகில்வாரியே தனிபுன்னைமீதில் அமர்ந்த
வன் (திரு

4. உம்பர்துன்பமறிந்துதானவர்க்குச்சகோதண்டவீரனும்
இன்பமுடன்குழல்கேட்டுநாரியர்சூழ்ந்திடும் ஸுகுமா
ரனும் (திரு

5. தாயும்கோறியதன் மகுடந்தனே தம்பியின்வசவம்தந்த
வன்
தாவியேஉரிமீதிலேதயிர்தாழிதனையபகரித்தவன்
(திருவேங்கடாசலமூர்த்தியே)

6. மானுடன் தொடர்ந்தோடும்வேளையில் மங்கையருவை யடைந்தவன்
ஆனிரைகளில்தூளியால் திருமேனிஎங்கும்நிறைந்தவன் (திரு

7. ஆழிதன்னை அணைத்துமன்னவர்சூழவேகடுவிருந்தவன்
தோழரோடரும்கானகம்தனில்பாரைமீதிலமர்ந்தவன் (திரு

8. தசமுகன் தன்னை வென்றவன் திருலோகமும்முடிகொண்டவன்
தொடர்ந்துகோபியர்கூவியேவாபயந்தும்ஓடிஒளிந்தவன் (திரு

9. சூழ்ந்திடும்புறம் தம்பிமாருடன் ஜானகிரகுராமனும்
அமர்ந்துத்வாரகைதன்னிலேபல தேவிமாருடன் கண்ணனும் (திரு

கனகாஜலம்தனில்நின்றவன் எனதன்னையின்வினைவென்றவன்

---

35. சுருட்டி—சாபு

"திக்குவிஜயம்செய்து திரும்பிவாரான்" என்ற மெட்டு

பல்லவி

அந்தமுடன் ரதத்தில் அமர்ந்துவாராரய்யன் அந்தணர்புடைசூழ (அ

அனுபல்லவி.

மைந்தனுடன் தருமசீலை மனமுருக
கந்தனுடன் அவளை கார்த்ததயாநிதி (அ

சரணங்கள்.

1. அசைந்திடவும் சதத்தில் தளர்ந்தமலரிரைக்க
இசைந்தஸிம்ஹாஸனம் எங்கும்ப்ரகாசிக்க
விசித்ரபீதாம்பரசீலைகளுங்குலுங்க
வேதியரும்மறைகளோதியுடன்நடக்க (அ

2 ராகமுறையுடனே நாதஸ்வரமொலிக்க
நாதன்வடிவுகொண்டு மாதவரும்ப்ரமிக்க
ஏகபுவிஎனவே யங்குஜெனம்வருக
தாகமுடன் ஹரியைக்காணவென்றுநெருக்க (அ

3. சேர்ந்துஜெனமுமையன்சரிதைதலம்பாஷிக்க
ஜெயஜெயவெனும்முறைஜெகமெங்கும்கோஷிக்க
ஸொந்தமுடன்எவரும்சேர்ந்துவடம்பிடிக்க
ஸுகந்தமலரையங்கு மாரிபோல்வருஷிக்க (அ

4. அரசர்மணிமுடிகளதிகமுடனேஎதிர்
வரிசைக்கொடியதுபோல்வரித்துச்ருங்காரிக்க
சிரஸில்கரங்குவித்து சீலர்களும்ஸ்துதிக்க
ஸ்ரீசன்மருளில்சிலராடியேவசனிக்க (அ

5. தூபமுடனேபழவகைகளொடுத்தெவரும்
நேமமுடனேஇருமருங்கிலாராதிக்க
தாகமுடன்பசித்துத்தவிக்கும்ஜெனங்களுக்கு
அன்னமுடனெதுவுமளித்துஉபசரிக்க (அ

6. முன்னைசிறுவனையும்மீறிநடந்தாதம்
கன்னிகையின்முதுகில் கண்டமருவினாதம்
என் அன்னைவினைதவிர்த்த ஐயன் அழகுநாதம்
அம்மனுடனேவெங்கடேசனமர்ந்தாதம் (அ

36. கமாஸ்—ஆதி

“மண்ணைத்தின்னவேண்டாமடா” என்ற மெட்டு

பல்லவி

ராமா பரந்தாமா ரமா பூமா வந்தனம் (ரா

அனுபல்லவி

ஸோமா குலநாமா முகில்ச்யாமா வந்தனம் (ரா

சரணங்கள்

1. போரவனை துரந்துபாரினில்தசரதற்கு
பகிர்ந்திடும்ஆயுதஸஹோதாருடன்பிறந்து
கானகத்திலேமுனியாகம்முடிந்திடவே
கருணையுடன்நடந்தசரணந்தனில்தினமும் (ரா

2. தாடகைவதம்முடித்து தம்பியுடனேநடந்து
கூடியேசிறுதுளியின்குளிர்ந்தமகிமையினால்
நாடிவெகுநாளுமுன்நினைவின்சிலைகொடியில்
நாரியின்வடிவமைந்தகளினமலரடியில் (ரா

3. சங்கரன்வில்லைமுறித்துஜானகிமணம்முடித்து
பொங்கியபரசுராமன்வீரம்தனைப்பறித்து
தங்கிஅரசாளுமுன்தினத்தில்அன்னையுரையால்
கானகம்நடந்தஉந்தன் கமலத்திருவடியில் (ரா

4. மாயமென்றறிந்தும் அந்தமானை துடர்ந்துவை
தேஹி தனைப்பிரிந்துதிசைகள் திரிந்தலைந்து
கூறியஜடாயுவின் தகனம்முடித்தவரும்
கோறியதில்லைஎனும் உன் குளிர்ந்தபதந்தனிலே (ரா

5. ஆவலுடனேசபரி அளித்தபலம்புசித்து
அரக்கன்கபந்தனை எடுக்கும்கரம்துணித்து

வேகமுடனேயவன் உரைத்தவழிநடந்து
மகிபன்ஸுக்ரீவன் உனைப்பணிந்ததிருவடியில் (ரா

6. சோரவேமாத்தையொரு சாமதினுல்துளைத்து
சிந்தையின குறிப்பரிந்து சிறியநகைப்புடனே
துந்துபிதனையுமொருத்ருணமதுபோல்தெறித்து
ஸுந்திரவடிவுடனேஜொலிக்கும்திருவடியில் (ரா

7. வாலியின்வதம்புரிந்துவானரர்க்குஅரசளித்து
சோலையின்லதிநிலையை மாருதியுரைத்திடவே
தீரமுள்ளராவணன் தெசமுடியும்துணித்து
தேவரும்பணிந்தஉந்தன் திருவடியில்தினமும் (ரா

8. மண்டலம்புகழ்இலங்கை மாநகரைஉந்தனையே
அண்டியவிபீஷணர்க்குஅரசின்முடிதரித்து
அண்டையினில்ஜானகியுடனுன்பதத்தினில்
அயோத்தியின்ஜனர்முடிகள் பணிந்ததிருவடியில் (ரா

9. லோதார்இருபுறமும் சாமரம் அசைத்திடவே
சிறப்புடனேபரதன் அரசின்குடைபிடிக்க
ஆசியுரைத்தேமுனி பட்டாபிஷேகம் செய்திடவும்
அகமகிழ்ந்தே ஹநுமான் தாங்கிய திருவடியில் (ரா

10. ஆதரவுடனெனது அன்னையின்வினைதவிர்க்க
அலர்ந்தமலர்மகளோடமர்ந்த வேங்கடேசனே
அரன்மிதிலாதிபன் அருமை மருமகனே
அரசன் தசாதற்கு இசைந்த திருமகனே (ரா

---

37. சங்கராபரணம் சாபு.

"கோபமென்னசொல்வாய்தேவா" என்ற மெட்டு

பல்லவி

உந்தன் பிழையின் குறையோ ஓதேவனே

முக்தி இழைத்த வினையோ (உங்

அனுபல்லவி

அடைந்தும்உன் அபயமென்றருள்பெருகாமலே
வாந்தருவாயென்று வேண்டுமெங்களிடத்தில்

சரணங்கள்

1. எங்கும் அலைந்ததின்மேல் இங்கு வந்த குறையோ
எங்கிருப்பதும் நீயே ஓ தேவனே
இங்கும் வினையகல சங்கைகொண்டகுறையோ
சங்கு சக்ரதாரி சரணம் சரணம் ஹரி (உங்

2. செலுத்தும் காணிக்கை ஏதும்இல்லையென்றகுரையோ
செல்வமளிப்பவர்நீயே ஓ தேவனே
ஜோஸிதனிலழைக்கும் வேளையிதுவெனவோ
மாலனேகோபியர் மதனகோபாலனே (உங்

3. பாசம்விலகாதுனை பற்றுவதின்குறையோ
பாசம் உனக்கும்இல்லையோ ஓ தேவனே
யாஜித்திடவரனை அழைப்பதினில் சலிப்போ
ஆழியில்சயனனே அலமேலுரமணனே (உங்

4. புவியில் பலரில்முதல்பாவிமுறைஎனவோ
காவலும் நீரில்லையோ—ஓதேவனே
ப்ரீதியுடனழைத்தும் மாதின் முறைஎனவோ
அன்னை வினையைதீர்த்த ஹரிவெங்கடேசனே (உங்

---

38. ஆரபி ஆதி.

“அறிவாரார் உன்மஹிமை” என்ற மெட்டு

பல்லவி

ஸ்மரிப்பாயே என்மனமே தினம் (ஸ்ம

அனுபல்லவி

திருமாலடித்தாமரை அனுதினமே (ஸ்ம

சரணங்கள்

1. செல்வமுடன் உலகில்செழித்திருந்தாலும்
சேயுடனே புவிகுடை தரித்தாலும்
அல்லவில்லா ஸௌகம் அடைந்திருந்தாலும்
ஐயன் புரிந்தலீலை அனுதினமும் (ஸ்ம

2. பெற்றவருக்கருமை சிறுவனென்றாலும்
சுற்றமுடனுலகில் சுகித்திருந்தாலும்
கற்றரும் மாமறை கரையறிந்தாலும்
கானில் இடையரோடும் நடந்தவனை (ஸ்ம

3. தரையில் உயர்ந்தபதம் தரித்திருந்தாலும்
மறையவரின் குலத்தில் உதித்திருந்தாலும்
வரைகடந்தே அறம் புரிந்திருந்தாலும்
வேங்கடகிரிநாதன் மகிமைதனை (ஸ்ம

4. முன்வினை தீர்த்திடும் மூர்த்தியின் நாமம்
பின்னே ஒருஜெனனம் தீர்த்திடும்நாமம்
அன்னையுடவினைகள் அகற்றியநாமம்
ஆதிமுடியும் காணாதவரைதினம் (ஸ்ம

---

39. ஆரந்த பைரவி திருப்புகழ் மெட்டு

"தொந்திசரிய மயிரே" என்ற மெட்டு

1. வேதமறையின் பொருளே வணங்கும்
அடியாரின் மதியின் இருளே அகன்றிடவும்
எருமலையிலெனவே சிகாமதில்—உறைந்தோனே

2. இந்துவதனமதிலே திலகமுடன்
சூழ்ந்தகுழலும் ஜடை மீதணிந்தமயில்
தோகையழகும் துலங்கதருணமெதிர்—வருவாயே

3. தொண்டாழைக்கும் துதியால் திருஉளத்தில்
கொண்ட கருணையலையால் தவழும் அருள்
தோன்றதணிந்தகைகையோடிதுசமயம்—வருவாயே

4. தூளிபடியும் திருமேனியும் செவியில்
ஜொலிக்கும் மணிகள் அசைய சிருவனென
சாய்ந்தநயனமலரோடிதுஸமயம்—வருவாயே

5. சங்கமெடுத்தகாத்தோன் திகிரிதனை
கொண்ட காமும் இடையேதறித்தடியில்
கின்கிணிகளும் அசைய கருணையுடன்—வருவாயே

6. மேனிஅழகைமறைத்தேதாயணிந்த
பூஷணங்களும் அணிந்தே மெல்லிய
பீதாம்பரமிடை தறித்தே தருணமிது—வருவாயே

7. மன்னுபுகழுதிருமாமலையிலிரு
கன்னியருக்கும் பதியே கருணையோடென்
அன்னைவினைகள் தவிர்த்தா தரித்திடவும்—வருவாயே

8. வாருப்வனஜநயனனுவிஷமடுவில்
தாவிக்குதித்தநடனஞ்திருமலையின்
கோடியமார்ந்தசாணு சமயமிது—வருவாயே

9 மங்கைதரித்தஉருவே ஸ்மரிக்கும்எந்த
ஜாதியருக்கும்உரவேவாதனென
எங்கும் புகழும் திருவேங்கடகிரியின்—பெருமானே

8A
2-22

40. சங்கராபரணம்—ஆதி

"கார்க்கவேணும் ராமா" என்ற மெட்டு

பல்லவி

வாராய்பாந்தாமனே வரதவெங்கடேசனே (வா

அனுபல்லவி

வாரும்வாருமென வருந்தியானும் வெகுதினங்களாரு
தையா

வரதனெனும்நாமமுனக்குமெய்யா
மெய்யெனிலித்தருணம் வாருமையாகார்க்க (வாரா

சரணங்கள்

1. தேவகீஎனமையும் கார்த்திடாமலினிதாளவில்லைதாபம்
எங்கள்வினைதீர்க்கும் வைத்தியரூபம்
கார்க்குமோசகண்டமான தீபம்கார்க்க (வாரா

2. அண்டமூன்றையும் அளந்தபொன்னடியில் தண்டை
(யோசைகேழ்க்க
திருவடியைக்கண்டுயான்ப்ரமிக்க
பணிந்தெதிரொன்நிலைதனைமறக்க—கார்க்க (வாரா

3. திட்டமாயிடையின்பட்டணிந்தஒளிதேஜஸெங்கும்வீச
தீனனிருநயனம்கண்டுகூச
தாயின்வினைதீருமென்றுபேச—கார்க்க (வா

4. பக்கம்தன்னில்பலமலரின்மாலைகளின்பரிமளங்கள்
இலங்க
பைந்துளபம்நெருங்கியேகுலுங்க
இறைந்தமலர்எடுத்துயான்களிக்க—கார்க்க (வாரா

5. நயமுறைத்து மிருகரந்தனில் பெரிய ஆயுதங்களேந்தி

நின்று திருமருவும் மார்பில்தாங்கி
கண்டுனே என்சங்கையேதும் நீக்கி—கார்க்க (வா

6. சந்த்ரகோடி ஸமசீதளம் திகழும் ஸ்ரீநிவாஸமூர்த்தி
முகமதைக்கண்டு யானும்போற்றி
களித்து பாமாலே தன்னைசாற்றி—கார்க்க (வா

7. அண்டமென்னும் பதினாலுலகும் அரசாளும்இக்தகிரீடம்
அதற்குதிகரானஸொர்ணபீடம்
அடியவருன்மலேயிலெங்கும் கூட்டம்—கார்க்க (வா

---

41. கல்யாணி—சாபு

"பெண்ணிவளல்ராமா" என்ற மெட்டு

பல்லவி

காரும்கருணைவள்ளலே கனகமலேயோனேமுதல்
பொருளே

அனுபல்லவி

ஆனே வினைதவிர்த்த ஆதிமூலமெனவே
அடைந்துமுன் அபயமென்றருள்பெருகாமலே (கா

சரணங்கள்.

1. மாதவனேயன்னேவேதனையகற்றுவ
தறிதோஉனக்குமிகபெறிதோ ஸமயமிது (கா

2. எண்டிசையும்புகழும் வைகுண்டநாதனே
கண்டேன்கமலேயுடன் குருவேங்கடேசனே (கா

---

42. ஸ்ரீராகம்—ஆதி

"ராமகோபாலாகலுங்கிட" என்ற மெட்டு

பல்லவி

என்றுன்னைக்காண்பதோ என்னய்யா
திருவேங்கடத்தின் குன்றிலிருக்குமுனை மெய்யாய் (எ

அனுபல்லவி

சென்றுபடியடைந்துன் தொண்டருடன்நடந்து
குன்றின்முடியடைந்துகண்டெதிராக (எ

சரணங்கள்

1. நிறைந்தகுளத்தினோடழகும்நாதன் உன்கோவில்
உயர்ந்தமதிலழகும்கண்டு
துளவின்வனத்தழகும் திருவளத்தினழகும்
என்குறைகள்தீர்த்தஉனைகூவிஎந்நாளும் (எ

2. கிரீடமதினழகும் அண்டம்மூன்றும் ஜொலிக்கும்
குண்டலத்தினழகும்கண்டு
தறித்தநாமத்தழகும் சிரித்த முகத்தழகும்
தரிசித்தும் அருகினில் வஸித்துமென்னாளும் (எ

3. பக்தரிடம் கருணைகொண்டு செலுத்துமிரு
நேத்திரத்தினழகுகண்டு
திருவினழகும் திருஆபரணத்தழகும்—அன்னை
வினைகள்தீர்த்தஉன்னை வேண்டிஎந்நாளும் (எ

4. திவ்யபீதாம்பரம்தறித்தஇடையழகும்
செய்வினைதீர்க்கும் பொருளாகும்
சங்கினழகும் சக்கரம்தறித்தகரத்தழகும்
உன் சரணகமலந்தனில் பணிந்துனைநாளும் (எ

5. ஆர்த்தாக்ஷகனெனும்தேவா அலமேலுநாதா
பத்மாவதியுடனே வாவா
பங்கஜநயனனேவெங்கடரமணனே
எங்குமிருக்குமுனை எதிரில் எந்நாளும் (எ

ஓடம்

ஏலேலோபூமிதனில் இறங்கியதோர்வைகுண்டம்
அழகானமாமலையாம் அலங்காரமானகராம்

முடுக்கு

ஸ்ரீ வெங்கடாத்ரியெனும் க்ஷேத்திரத்தைநாடி
ஸமயமிதுவே ஹரியின் யாத்திரையில் கூடி
கங்கைஎனவே கபிலதீர்த்தமதிலாடி
தருமங்கள்செய்துதாமோதரனைத்தேடி
கோவிந்தராஜனைக்குளிர்ந்துதெரிசித்து
ஸ்ரீ பூமிதேவிதனைக்கண்டுபூரித்து
சூடிக்கொடுத்தவொரு நாச்சியாருடைய
ஸன்னிதியடைந்து எதிர்நின்றுஸேவித்து
ஸ்ரீ ராமலெக்ஷ்மணரைக்கண்டுஸேவித்து
ஜன்மமிதில் ஸந்தோஷமானதினமென்று
பக்தியுடனேமலையின்அடிவாரம்சேர்ந்து
சித்தடியில்காணிக்கை தந்துத்யானித்து
கோவிந்த கோவிந்த கோவிந்தா என்று
கோகுலோத்தம கோபிகோபாலாவென்று
நாராயணாவென்று நாமங்களோதி
நடந்திடும்வேளைப்ரும்மானந்தமாகி
சேஷமலையும் கருடமாம்லையிதென்றும்
அஞ்சனஜலமென்றும் அனைவோரும்கூறும்
வெங்கடாஜலமென்றும் வ்ருஷபாத்திரிஎன்றும்
நாராயணாத்ரிஎனும் நல்லவொருநாமம்

வேதங்கள்கூறும் வ்ருஷாஜலமிதென்றும்
நாமங்களேழும் நிறைந்தபொருசைலம்
அச்சுதனையேகூவி பிச்சையென்பாரும்
ஐயனே என்று பின் ஓடிவருவோரும்
அண்டையினிலேவிசிறி வீசிவருவோரும்
அரைக்காசுவாங்கி அதனாலேமகிழ்வோரும்
ஏழுமாமலைதாண்டி எங்கள் பெருமாளும்
வாழும் ஸ்ரீ வைகுண்டமாககாடைந்து
ஸ்வாமிபுஷ்கரணிதனில் ஸந்தோஷமாக
ஸ்நானமுடனேஸ்வர்ண தானங்கள்செய்து
ஸர்வேசன் வாழும் ஒரு ஸந்நிதியடைந்து
சுத்திமே நாற்பத்திஐந்து வலம் வந்து
கெருடராஜனையும் பணிந்து பூஜித்து
கருணாகடாக்ஷனது ஸ்தானமது கண்டு
மூலமெனும் ஸ்ரீ வெங்கடேசனதுகீர்த்தி
மூன்றுலகுலாவிடும் மெய்யானமூர்த்தி
ஹரிநாமமில்லாத அறிவிலிகள் தன்னை
விடுவனோ நாளைஎமன் வெருமையினில்உன்னை
வீசுமொருபாசம் விழுந்திடும் அந்நாளில்
நாராயணாஎன்றுரைப்போரறிந்து
சிருவினையளித்து நரர் சிந்தையிலிருப்பார்
ஹரிஎன்னைக்காரும் என்றுரையில் பூரிப்பார்
என்மலையில் வருமென்றெளிதாயுரைப்பார்
முன்வினையுடன் அவர் அளித்தவினைதீர்ப்பார்
இஷ்டருடனேஎதிரில் நின்றுவசதிப்பார்
கஷ்டம் விலக்கி சிருகாணிக்கை கேழ்ப்பார்
வட்டியுடனேவாங்கி வறியோர்க்களிப்பார்
துஷ்டரையறிந்தே துரத்தியுமடிப்பார்
ஸ்வர்ணமலைமீதிலுரைஜோதிப்ரகாசன்

அன்னவினை தீர்த்ததொரு ஹரிவெங்கடேசன்
மாணிக்க மகுடம்தரித்தமாதவனை
மறைபுகழும் கஸ்தூரிநாமநெற்றியனை
காருண்ய நோக்கமொடு கமலநேத்திரனை
கரந்தன்னிலே சங்கம் ஏந்தி நின்றவனை
தாஸரை யழைத்திடும் தணிந்த கையோனை
துலங்கும் பயத்துடன் தனித்தி கிரியானை
ஸ்வர்ணகுண்டலமொடுஜொலிக்கும் செவியானை
ஸுகந்தமிகவே துளவணிந்தமேனியனை
சேர்ந்தநவமுத்துக்கள் அணிந்த ஸுந்தரனை
ஸரப்பளிபதக்கம் அசைந்தாடும் ஸ்ரீதரனை
ஸமஸ்தாபராதம்க்ஷமிக்கும்சிந்தையனை
ஜகமூன்றும்வைத்தசிற்றிலைவயிற்றோனை
கனகாம்பரத்திடையில் கொண்டகையோனை
கமலாஸனம்கொண்ட பாதபங்கஜனை
மார்பில்அணிந்ததிரு மங்கைமருவோனை
பாரையளந்தஇரு பாதமலரோனை
கானயமேனியனை கண்டுதெரிசித்து
கண்ணிமையசையாமல் கண்டுபூரித்து
கண்ணையடைந்ததொரு காரணமும் இன்று
கண்டோமென்றேமிகவும் ஆநந்தங்கொண்டு
அர்ச்சனையும் கற்பூரதூபமது கண்டு
அவர்பாததீர்த்தமதை அன்புடனே கொண்டு
கூட்டம் மிகுந்ததிலுயர்ந்துநிற்போரும்
குழந்தைகளென்றுசிலர் கூச்சலிடுவாரும்
கோவிந்தனே என்று கோஷமிடுவாரும்
கோபாலனைக்கண்டு குளிர்ந்து நிற்பாரும்
தேவனே எனக்கிங்கு தெரியலை என்பாரும்
தெரியுதிங்கே என்று தேடியழைப்பாரும்

போகியரும் வந்துஇனிப் போங்களென்பாரும்
அநேகம் ஜனமங்கு இருக்குதென்பாரும்
போகிறோமென் றுசிலர் பார்த்துநிற்பாரும்
தேவனே என்றுசிலர் திரும்பிபபார்ப்போரும்
வாளைஎடுத்துசிலர் வீசி நிற்பாரும்
விலக்கி ஒருபாகம் அதட்டி நிற்பாரும்
பூர்ணவதாரனிரு பொன்னடிபணிந்து
தாரணியிலேபடும் தாபந்துரந்து
அறிவென்னும் மத்தியிலென் ஐயனைப்பதித்து
பிறவியுடன் ஸந்நிதியின் தரைதன்னைத்தாண்டி
சட்டமுடனே ஹரியின் கட்டளையிதென்றும்
திட்டமுடனேகூறும் தாஸரிடம் சென்று
கெருடவாகனமெங்கள் கட்டளை என்பாரும்
திருக்கல்யாணமென்றதொரு கட்டளை என்பாரும்
ஸஹஸ்ரநாமமிரண்டு செய்யுமென்பாரும்
சதநாமம் ஜந்தின் வரிகூறுமென்பாரும்
ஏகாந்தசேர்வையொரு நாலுபேரென்றும்
எங்களது இரண்டென்றும் இங்குநாலென்றும்
தோமாலை சேர்வையதின் வரிஎன்னவென்றும்
துரிதமுடனெங்களை அனுப்புமென்பாரும்
நிலத்தவரும் நெல்குதுரு காட்டுவதுபோலும்
படைத்ததொருஉண்டிதனைப்பார்த்துநிற்போரும்
சுற்றியேசிலவீரர் எங்குமசையாமல்
செலுத்துவதிலங்கிலும் சிறந்ததொருகாவல்
பாலனையளித்ததொருப்பார்த்தனையிதென்றும்
பெரும்நோய்கள் நீக்கிட வரித்தவரிஎன்றும்
போனதொருபொருளை அளித்தபணமென்றும்
என்பக்ஷமதிலே வழக்கானபணமென்றும்
காணிக்கைதன்னைக்கணக்குமிடுவாரும்

178205

இரக்குமொருகூளை எதற்கென்றுகேட்பாரும்
கூடியே பஜனைகள் பாடிவருவாரும்
குரங்குகளின் வேடிக்கை பார்த்துநிற்பாரும்
சேயனையளிக்கரதம் செல்லாமலன்று
கூசியேநின்றதொரு கோஸாயிமடமும்
சத்திரம் அநேகமொடு சித்ரவீதிகளும்
சிறந்தபலமாளிகையின் தீபஜோதிகளும்
முறையாகவேதினமும் மகரதோரணமும்
மாமலருடன் துளசி பல நந்தவனமும்
ஆதியிலுதித்தஹரி அவதாரமென்று
கூரும்வாராஹரையும் கண்டுதெரிசித்து
ஆகாசகெங்கையொடுபாபநாசனமும்
ஹத்திராமனும் அன்றிருந்ததொருமடமும்
மஹமைகளறிந்து மலை அடிவாரம்கூடி
மங்காபுரந்தன்னில் தீர்த்தமதிலாடி.
அலமேலுமங்கையரின் அலங்காரங்கண்டு
ஆராதனைசெய்து ஆநந்தங்கொண்டு
பத்மாவதியினிரு பொன்னடிபணிந்து
ப்ரதக்ஷிணநமஸ்கார பூஜைகளும்செய்து
நேமமுடநேதங்கள் ஊர்தன்னைநாடி
தாமஸமில்லாமல் சில வேதியரைத்தேடி
வஸ்திரமுடன் தயிலஸ்நாநம்அளித்து
வரிசையுடனேபாகமதுசேகரித்து
ஸ்ரீ வெங்கடேசனையும் ச்ருங்காரம்செய்து
ஸுகந்தமலரும் துளசிபூஜைகள்செய்து
ஷட்ரஸமுடன்நல்ல போஜனமளிந்து
ஸ்வர்ணமுடன் தாம்பூலதானங்கொடுத்து
ஈசனெனவேயவர்கள் பாதம்பணிந்து
கேசவரெனும் அவரின் ஆசிகளடைந்தோர்

விரதங்களும் பல முகித்ததொருகோடி
நிறைந்தஉபவாசம் இருந்ததொருகோடி
கங்கைஎனிலாடியதில் கண்டுஒருகோடி
பலந்தனைபடைந்தநர் பாதம்பணிந்தேன்
ஏலேலோஎம்பெருமான் இணையடியின் பீடமதில்
வண்டெனவே வீற்றிருக்கும் தொண்டரெனும் மானி
டரோ (ஏலே)

---

43. விருத்தம்

1. கொண்டலும் உந்தன்மேனிக்கிணையதுகூறவென்று
பண்டையில் ஏதுபாக்யம் புரிந்ததோ அறிகிலேனே
வண்டினமுனதுகேசக்குழலிணை கூறவென்று
அண்டையிலிருந்துசெய்ததொண்டெது அறிகிலேனே

2. நின்றதிநாளுமுந்தன் நேத்திரத்திணையும்கூற
புண்டரீகமுமிழைத்த பணியெது அறிகிலேனே
தெண்டிரைக்கடலிலுள்ளே தனிதுணைப்பாடும்சங்கம்
கண்டதின்உவமைகூறஸ்துதித்ததும் அறிகிலேனே

3. சசியெனும் மதியுமுந்தன் திருமுகத்துவமைகூற
முறைகுறையாமல்செய்த விரதமும் அறிகிலேனே
திசைபுகழ்வில்லுமுந்தன்புருவமதிணையும்கூற
திரமுடனேதுசெய்ததர்மமுமறிகிலேனே

4. சிறப்புயர்திகிரிசேரும் உன் செங்கரத்திணையும்கூற
கற்பகத்தருஅந்நாளில் புகழ்ந்ததும் அறிகிலேனே
நிறைகடல்உனதபாரகருணையின்உவமைகூற
இரையுவதுனதுநாமமெதுவென அறிகிலேனே

5. தாமரையுந்தன்பாதத்திணையதுகூறவென்று
தணிவுடன்நின்றுசெய்ததவமது அறிகிலேனே

ஸ்ரீபதிஉன்னைநாளும் சிரஸினில்தாங்கிநிற்க
திருமலைசெய்தபூஜை எதுவெனஅறிகிலேனே

6. பன்னகமலையோனாகி பதுமையின்னாதனாகி
என் அன்னையின்வினையைத்தீர்த்த ஹரிவேங்கடேச
னாகி
மன்னவர்மன்னனாகி முனிவரின் முனிவனாகி
உன்னரும்துணையும்கொண்ட அன்னவர்க்கெளியமா
னே

---

44. விருத்தம்.

1. வானாடும்தாழும் வடமலையின்சிங்காரம்
காநாறும் சூழும் கருமுகிலும் தான்சேரும்
பூமலரும்சோலை புள்ளினத்தில் ஒன்றாகி
எம்பெருமான்திருவடியைப்பற்றிடுவதென்னாளோ

2. மான்ஓடும்கானமயிலினங்கள்தானாடும்
தேனாரும்கூடும் தருக்களில் அதன்வீடும்
தானேமுளைத்தவீணிலொருபூண்டெனிலென்
கோனேயுன்திருவடியில் குளிர்ந்திருப்பதென்னாளோ

3. இச்சையதுபோலும்எழும்மதிலெனும்பாறை
பச்சிலையின்தோரணமும்பசுந்தளவின்கானிடையில்
நச்சரவம்தானாடும் நாலுமதிலொன்றாகி
அச்சுதாஉன்னடியில் அமர்ந்திருப்பதென்னாளோ

4. தீங்கனிகளாகிதருவிருந்துதான்விழும்
தாமரையிலூறும் தேனினம்மலர்ஸாரம்
பருகியுனைப்பாடும்அந்த தும்பிதனிலொன்றாகி
திருமாலுன்சித்தடியில் சேர்ந்திடுவதென்னாளோ

5. விண்ணோரும்யோகமுனிவரிலையின்வீடும்
முன்னொளியேயுதித்தபொன்முகரியோடைதனில்
தண்ணோரும்ஜீவகோடி தனில்ஒன்றாகி
கண்ணாஉன்பொன்னடியில் முன்னிருப்பதென்னாளோ

6. அருமறைகளோதும் அடியவர்கள்உன்கோவில்
வரும்வழியிலேமலையின் மாசுதனிலொன்றாகி
பிறவி எனும் ஆழிக்கரைமுடியில்யானேறி
உன் இருமாமலரடியில் இருந்திடுவதென்னாளோ

7. முன்வினைகளோடும் இடும்வினைகள் தானோடும்
அன்னைவினை தீர்த்த அரும்பொருளைநாடும்
தரைமகளின் மார்பத்திருவேங்கடத்தரசே
உன்சரணாம்புஜத்திலெனை சேர்த்திடுவதென்னாளோ

---

45. காம்போ—ஆ

"கல்லார்க்கும் கற்றவர்க்கும்" என்ற மெட்டு.

1. ஸ்தலமாடி யுன்திருவடியைத் தெரிசித்திட அறியேன்
மிக மெலியோனென அறிந்தே பலனளித்திடு முன்ன
டியேன்
முறையுடனே விரதம்பலமுகித்திடவும் முடியேன்
மிக வறியவரிலுயர்ந்த ஒரு பிறவியுமதடியேன்.
தடைதாரந்துன் திருமலையில் வசித்திடவும் முடியேன்
மிகக்கொடியதெனும் பெண்ணுருவைக் கொண்டேனு
மதடியேன்
தணிந்து தவம் செய்து உமைத்தெரிந்திடவுமுடியேன்
துயர் மிகுந்திடுமவ்வேளை யுமைமறந்திடு முன்னடி
யேன்
அருமாமறை புகழுமெய்கள் திருமாமலையரசே,
எனக்கபயம் தாஸமயம் உனதடியவர்க்கு மடியேன்

2 மறவாமலுன் திருநாமம் முறையாயுரைத்தறியேன்
இனிப் பிறவாமலுன் திருப்பதத்தைப்பற்றும் வகை
யறியேன்
அலேவாயெனும் உயிரையவமதித்திடவுமறியேன்
வெகு நிலேயாமுனதுருவை மதியில் தரித்திடவும் தெ
ரியனே்
உனேப்புகழ்ந்தாடும்பெறியவரைப்பணிந்திடவுமறியேன்
எனே இகழ்ந்தே பல உரைத்தவர்க்குத் தணிந்திடவும்
தெறியேன்
பெறியாரென வறிந்தே யுபசரித்திடவும் அறியேன்
அக மகிழ்ந்தாடியுன்னருகினில் ஸஞ்சரித்திடவும் தெ
றியேன்
அருமாமறை புகழுமெய்கள் திருமாமலேயாசே
எனக்கபயம்தா ஸமயமுன தடியவர்க்கு மடியேன்

3 ஈரேழுலகாளும் மலேயாசே யுனதடியேன்
புவியாளும்பதமளித்திடினும் பெறிதெனவே மதியேன்
மலேமுடியில் ஜொலிக்கும் நவமணியே யுமதடியேன்
நார்விலே மதிக்கும் வயிரமெதும் பார்த்திடவும் நினே
யேன்
பெருமானடிமலரின் மது பருகுமுனதடியேன்
மலருறையாடி என்தேனருந்து மெனிலுமதை மதி
யேன்
அரசின் முடிதறித்தோரெனும் பணியேனுமதடியேன்
ஹரிதாஸன் திருவடியில் தினம் பணிந்திடுமுன்
னடியேன்
அருமாமறை புகழுமெங்கள் திருமாமலேயாசே
எனக்கபயம்தா ஸமயம் உனதடியவர்க்கு மடியேன்

உயரமுடன் மாளிகையில் அமர்ந்திடவும் நினேயேன்
மலேசிகாமதின் தரிசனத்தில் ஸுகித்திடுமுன்னடியேன்

நிறைத்துட்டிலாபரணம் தரித்திடவும் நினையேன்
அகம்குளிர்ந்துனது தீர்த்தமதில் ஆடுமுனதடியேன்
அலைந்துலகின் செல்வமதை அடைந்திடவும் குறியேன்
வலம் புரிந்துனது ஆலயத்தில் புகுந்திடுமுன்னடியேன்
பரிவுடனே ஈன்றவநின் அருமையுறைமதியேன்
உன்தன் மருளுரையில் அழைத்திடவும் மகிழ்ந்திடு
முன்னடியேன்

அருமாமறை புகழுமெய்கள் திருமாமலை யாசே
எனக்கபயம் தா ஸமயம் உனதடிபவர்க்குமடியேன்

5 கடலாகிய மனையின்கரை கண்டிடவும் முடியேன்
அவகுண மென்றலைவென்றிடவும் அறியேனுமதடி
யேன்
மகிழ்ந்துனது தாஸருடன் சேரும் வழியறியேன்
அகம் குளிருமுந்தன் சரிதை எதும் அறியேனுமதடி
யேன்
உரைத்திடுமுன்கதையில் செவிசெலுத்திடவும் முடி
யேன்
உம்மைபஜித்திடவும் காலமதைக் காணேனுமதடியேன்
நளினமலர் மாதுடனே நின்ற நெடுமாலே
என்னை யளித்தொரு அன்னைவினை வெனறபெருமா
ளே

அருமாமறை புகழுமெய்கள் திருமாமலையாசே
எனக்கபயம்தா சமயம் உனதடியவர்க்குமடியேன்

---

46. நீலாம்பரி ஆதி

தாலாட்டு

1 கடல் மனையே கொண்டவனே
இலைதனிலே துயின்றவனே

மலைதனிலே நின்றவனே
ஸ்ரீ மாதவனே தாலேலோ

2 அஸுரனையும் வென்றவனே
நரஹரியாய் நின்றவனே
இருவனையும் கார்த்தவனே
சதுராயுதனே தாலேலோ

3 தசரதன் தவமகனே
தசமுகனை வென்றவனே
ஸீதாமனோகரனே
ஸ்ரீ ராகவனே தாலேலோ

4 சோதையரும்பாலகனே
சிசுபாலன் அந்தகனே
கோபியர்மனோகரனே
கோபாலகனே தாலேலோ

5 ஆப்தஜனரக்ஷகனே
அலமேலுமன்னவனே
ஸ்ரீ பத்மா வல்லபனே
ஸ்ரீ ஹரியே தாலேலோ

6 அரவணைமேல் நின்றவனே
அன்னைவினை வென்றவனே
திருவேங்கடேச்வரனே
தயாபரனே தாலேலோ

47. பிலஹரி—ஆதி

“வாருங்கோடி நீராட என்ற மெட்டு” என்றமெட்டு

பல்லவி.

தேவனே இது காலம் பரந்தாமனே எழுந்திரும் (தே)

அனுபல்லவி.

பூமகளுடன் பெரும் பாம்பணையிலிருந்து (தே)

சரணங்கள்.

1. நேமமுடன் பெரியோர் உன் நாமமுரைத்துனக்கு
க்ஷேமமெனவே ஸுப்ரபாத முரைத்திருக்கும் (தே)

2. கெங்கை எனும் குளத்தில் ஆடியனைவருமுன்
ஸந்நிதியி லுனையும்பாடி நிரைந்திருக்கும் (தே)

3. தேவர் முனிவருடன் தாஸகணங்களுனை
ஸேவித்திட வெதிரில் சேர்ந்திருக்கார் இதோ (தே)

4. ஆய்ந்த துளவுடனே ஹாரமுடன் பழமும்
கெந்தமுடன் எதிரில் காத்திருக்காரிதோ (தே

5. கண்ணனென உனக்கு வெண்ணெயுடன் தயிரும்
புண்ணியரும் காத்தில் பாலுமெடுத்துவரும் (தே)

6. கோவிந்தனே எனும் கூரும் மணியொலிக்க
ஸ்ரீமதியுடன் திருச்சேர்வை எனக்களிக்க (தே)

7. சங்க மொலித்திடவும் ஸமயமிதுவெனவே
சிலர் காங்குவித்து ஸ்ரீ ஹரி ஹரி எனும் (தே)

8. நாரணனே பலநாமம் தரித்தவனே
ஆரணனே எனதன்னையைக் காத்திட்ட (தே)

9. இந்திராமணனே செந்திருநாமனே
சங்குசக்ராதானே ஸ்ரீ வெங்கடேசனே (தே)

---

48. பியாக் ஆதி.

வந்தனம் தந்தோம் என்றமெட்டு

பல்லவி.

மங்களம் ஸதாஜெய மங்களம் ஸதா

அனுபல்லவி.

மங்களம் மங்களம் மதனகோடி ரூப மந்தஹாஸனே
பணிந்து நாம் பாடுவோம் புஜங்கசைலவாஸனே (ம)

சரணங்கள்.

1. பக்ஷிராஜன் மீதிலேறும் ப்ரணவசைல தீபனே
வக்ஷமதில் ஸ்ரீ லெக்ஷ்மிதனை வைத்த வெங்கடே
சனே (ம)

2. பேதை என் பிழைதனை திருத்திடும் தயாளனே
ஆதிசேஷன் மீதிருக்கும் அஷ்டலெக்ஷ்மி லோலனே

3. எளியே வினைசெயும் அவர் குலத்து ஆரனே
காவலா என்னனனை வினைதவிர்த்த வெங்கடேசனே (ம)

4. வேத சாஸ்த்ரம் புராணம் புகழ்ந்திடும் கிரீசனே (ம)
ஆதியந்த மற்றதொரு ஜோதியாம் ஸ்வரூபனே (ம)